பரிபாடல் பாடல் வினா

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும்; பனியோடு
தண்பெயல் தலைஇய ஊழியும்: அவையிற்று
உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்.

வினாக்கள்

1.இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

பரிபாடல்

2.இப்பாடலை இயற்றியவர் கீரந்தையார்

3.ஊழ் ஊழ் – இலக்கணக்குறிப்பு அடுக்குத்தொடர்

4.ஊழி என்பதன் பொருள் யுகம்

5.வானத்து இசையில் – இசை என்பது பேரொலி

6.‘தண்பெயல்’ என்ற சொல்லின் பொருள் குளிர்ந்த மழை

7.செந்தீ – இலக்கணக்குறிப்பு பண்புத்தொகை

8.சிறப்பு என்ற பொருள் தரும் சொல் பீடு

9.இருநிலம் - இலக்கணக்குறிப்பு உரிச்சொல் தொடர்.

10.பரிபாடலில் எழுபது பாடல்கள் இருந்ததாகக் கூறியவர்கள் உரையாசிரியர்கள்.

11.தற்போது பரிபாடலில் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை 24

12.சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல் பரிபாடல்

13.தலைஇய என்பது செய்யுளிசை அளபெடை

14.விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல என்ற பரிபாடல் அடிகள் உணர்த்தும் உண்மை அறிவியல் உண்மை

15.பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்

16.பரிபாடல், ஓங்கு பரிபாடல் என்னும் புகழுடையது.

பொருள் அறிக.

17.ஊழி = யுகம்

18.விசும்பு = வானம்

19.வளி = காற்று

20.ஊழ் = முறை

21.தண்பெயல் = குளிர்ந்த மழை

22.ஆர் தருபு = வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த

23.பீடு = சிறப்பு

24.ஈண்டி = செறிந்து திரண்டு

இலக்கணக்குறிப்பு

25.ஊழ் ஊழ் - அடுக்குத் தொடர்

26.வளர்வானம், கருவளர் – வினைத்தொகை

27.செந்தீ, தண்பெயல் - பண்புத்தொகை

28.வாரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

29.கிளர்ந்த - பெயரெச்சம்

30.தோன்றி, ஈண்டி, மூழ்கி – வினையெச்சம்

31.பாடலில் உணர்த்தப்படும் கருத்து அறிவியல் செய்தி

32.விசும்பு, இசை, ஊழி, முறையே

பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் வானம், பேரொலி, யுகம்